<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 116/2017 | சாட்சி | வா.சா.2 |
| பெயர் | செண்பகவள்ளி | நாள் | 24.01.2024 |
| தகப்பனார் பெயர் | விஜயன் | | |

**<u>பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.2 ஐ குறுக்கு விசாரணை:–</u>**

1) இவ்வழக்கில் சாட்சி சொல்வதற்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை எதுவும் எனக்கு வரவில்லை என்றால், சரிதான். வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க இவ்வழக்கில் நான் சாட்சியமளிக்கிறேன் என்றால், சரிதான். இவ்வழக்கு யார் தாக்கல் செய்துள்ளார் என்றால், என் பாட்டனார் தாக்கல் செய்துள்ளார். யார் மீது தாக்கல் செய்துள்ளார் என்றால், நெடுஞ்சாலைதுறை மீது தாக்கல் செய்துள்ளார். என்ன பரிகாரம் கோரியுள்ளார் என்றால், நெடுஞ்சாலைதுறையினர் தாவா சொத்தை காலி செய்ய அறிவிப்பு அளித்ததால், அதற்கெதிராக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தில் வாதி எவ்வளவு வருடங்களாக வசித்து வருகிறார் என்றால், வாதி பிறந்ததிலிருந்தே தாவா சொத்தில் தான் வசித்து வருகிறார். சுமார் 70 வருடங்கள் இருக்கும்.

2) இவ்வழக்கில் 1 வது சாட்சியாக யார் விசாரிக்கப்பட்டுள்ளார் என்றால், என் தாயார் கிருஷ்ணவேணி விசாரிக்கப்பட்டுள்ளார். எதனால் வாதி சாட்சியமளிக்கவில்லை என்றால், வாதிக்கு உடல்நிலை சரியில்லாமல் சிகிச்சை பெற்றுவருவதால், என் தாயார் முதல் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். தற்போது நான் எங்கு வசித்து வருகிறேன் என்றால், சேலம் கேம்பில்தான் வசித்து வருகிறேன். தாவா சொத்தில் யார் யார் தற்போது வசித்து வருகிறோம் என்றால், என் பெற்றோரும், வாதியும், நானும், என் சகோதரரும் வசித்து வருகிறோம்.

3) மேற்படி தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால், தெரியும். சர்வே எண்.1/11 ஆகும். எந்த வார்டு என்றால், 5 வது வார்டு. பிளாக் எண் எனக்கு தெரியாது. ஆரம்பத்தில் தாவா சொத்தில் மண்ஓடு போட்ட வீடு கட்டினோம். தற்போது அதை

அகற்றி விட்டு சிமெண்ட் அட்டை போட்ட வீடு கட்டியுள்ளோம். தாவா சொத்திலுள்ள வீடு எவ்வளவு அளவுடையது என்றால், நீள, அகலங்கள் எனக்கு தெரியாது. ஆனால் மேற்படி வீடு சுமார் 2-1/2 செண்ட் அளவுடையது.

4) தாவா சொத்து என்ன வகையான நிலம் என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை. ஆனால், தற்போது நாங்கள் நகராட்சிக்கு வரி செலுத்தி வருகிறோம். தாவா சொத்தை ஒட்டி வேறு நபர்கள் வசித்து வருகிறார்களா என்றால், வசித்து வருகிறார்கள். அவர்கள் வசித்து வரும் நிலம் என்ன வகைபாடு கொண்டது என்றால், அது பொது பணிதுறைக்கு சொந்தமான நிலம் ஆகும்.

(பிரதிவாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.2 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/-திரு. R.மணிவர்மன்,

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.